செ.வெ.எண்: 38 நாள்: 15.11.2016

# பத்திரிகைச்செய்தி

## தமிழ்நாடு தெரு வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் முறைப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015 விதி எண்.26-ன் கீழ் அறிவிக்கை.

தமிழ்நாடு அரசிதழ் எண்:230 (அசாதாரணம்) நாள்:02.11.2015-ல் தமிழ்நாடு தெரு வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் தெரு வியாபாரம் முறைப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015-ல் [The Tamilnadu Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Scheme and Rules 2015] விதிகளை இயற்றி அவ்விதிகளில் தமிழ்நாடு தெரு வியாபாரிகள் நலன் கருதி திட்டம் தீட்டுதல், தெரு வியாபாரிகளின் கணக்கெடுப்பு நிபந்தனைக்குட்படுத்தி தகுதியுடையவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல், வியாபாரம் வாரியாக வகைப்படுத்துதல், அடையாளச்சான்றிதழ் வழங்குதல், பரப்பளவிற்கு ஏற்ப வியாபார கட்டணம் செலுத்துதல், சான்றிதழை இரத்து செய்தல், மாற்று இடம் ஒதுக்குதல், தகுதியற்ற இடங்களில் வியாபாரம் செய்வதை கட்டுப்படுத்துதல், சுற்றுப்புற சூழலை தூய்மைப்படுத்துதல் ஆகிய இனங்களைக் கொண்டு உரிய படிவங்கள் வரையறுக்கப்பட்டு இப்பொருளுக்கான சட்டம் மற்றும் விதிகள் வடிவமைக்கப்பட்டு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளதால் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 8 பேரூராட்சிகளிலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் மேற்படி திட்டம் மற்றும் சட்ட விதிகளை புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள (1) ஆலங்குடி (2) இலுப்பூர் (3) கறம்பக்குடி (4) கீரனூர் (5) பொன்னமராவதி (6) அரிமளம் (7) அன்னவாசல் மற்றும் (8) கீரமங்கலம் ஆகிய பேரூராட்சிகளில் முறையே நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து இவ்வறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இக்கணக்கெடுப்பு பணியின் பொழுது, கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளும் சம்மந்தப்பட்ட பேரூராட்சி பணியாளர்களிடம், சாலையோரத்தில் வியாபாரம் செய்யும் நபர்கள் தங்களது பெயர், வசிக்கும் நிரந்தர முகவரி, பிறந்த தேதி, வகுப்பு, வாக்காளர் அடையாள அட்டை / குடும்ப அட்டை / ஆதார் எண், செய்யும் தொழில், வியாபாரம் செய்யும் இடத்தின் அமைவிடம் முதலான சுய விபரங்களை கணக்கெடுப்பு பணியின் பொழுது தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. 16.11.2016ஆம் தேதி முதல் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**